புதிய சிப்காட் தொழிற்பேட்டைகள் - மினி டைட்டல் பூங்காக்கள்!

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பதிலுரை...

5ஆம் பக்கத் தொடர்ச்சி

என்ற உறுதியை தங்கள் வாயிலாக அவைக்கு வழங்குகிறேன்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம். TIDCO பற்றி ஒரு சில lineல் மட்டும் பதிவு செய்துவிடுகிறேன். தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் சிறப்பாக செயல்பட்டு, கடந்த ஆண்டு மட்டும், 15.17 கோடி ரூபாயை ஈட்டி, வரைவோலையை முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறது. இது போன்று, பல வருவாயை இந்தத் துறைமூலம் கொடுத்தாலும், தங்கம் அண்ணன் எங்களை கவனிப்பதில்லை.

டி.என்.பி.எல். பிரமாண்ட வளர்ச்சி!

அதேபோல, TNPL மிக பிரம்மாண்டமான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. ஆம், TNPL before tax நேரத்தில் 317 கோடி ரூபாய் வருவாயை ஈட்டியுள்ளது. TNPL காகித உற்பத்தி மட்டுமல்லாமல், இப்போது tissue paper உற்பத்தியிலும் நகரப்போகிறது. இந்த அரசு நீண்டகால பிரச்சினைகள் பலவற்றிற்கு தீர்வு கண்டுள்ளது. TNPL நீண்டகால பிரச்சினைகள், அதுவும், குறிப்பாக, TNPL கரூரில் மட்டும், 588 நபர்கள் 20 ஆண்டுகளாக அங்கே பணியில் இருக்கின்றனர். அந்த 20 ஆண்டு கால அவர்களது கோரிக்கையை, 588 நபர்களின் பணியை நிரந்தரம் செய்து, அவர்களின் வாழ்வில் மிகப் பெரிய ஒளியேற்றியிருக்கிறார்கள் முதலமைச்சர் அவர்கள். இதற்காக CMD, சாய்குமார், I.A.S., அவர்களுக்கு எனது நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரியலூர் சிமெண்ட் ஆலை!

இதேபோல் அரியலூர் சிமெண்ட் ஆலையில் 30 ஆண்டு காலம் தீர்க்கப்படாத நிலப்பிரச்சினை இருக்கிறது. அண்ணன் MLA இருக்கிறார். 30 ஆண்டு காலம் தீர்க்கப்படாத நிலப்பிரச்சினை வெகுவிரைவில் தீர்க்கப்படும் என்ற உறுதியை இங்கே அளிக்கிறேன். இன்னும் ஒரு சில வாரங்களில் அதற்கான நல்ல செய்தி உங்களுக்கு வரவிருக்கிறது.

முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட வலிமை சிமெண்ட் மிகுந்த வரவேற்பை பெற்றிருக்கிறது. வலிமை சிமெண்ட் வந்த பிறகுதான், இன்றைக்கு சிமெண்ட் விலை மிகப் பெரிய கட்டுப்பாட்டில் இருக்கிறது என்ற செய்தியை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதேபோல் அரியலூர் மற்றும் ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலைகளில் பல புதிய மாற்றங்களை கொண்டுவந்து உற்பத்தியைப் பெருக்க இருக்கிறோம். அங்கே MSand குறித்து நீங்கள் கேட்டீர்கள். அதுகுறித்த அறிவிப்பும் இங்கே சற்று நேரத்தில் வரவிருக்கிறது. அதைப்போல, அமைச்சர்கள் எல்லோரும், நீங்கள் அனைவரும், TANCEM (Tamil Nadu Cements Corporation Limited)க்கு (குறுக்கீடு) அதற்குள்ளே இல்லையென்றால், எப்படி? TANCEMக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் இங்கே வைக்கவிரும்புகிறேன்.

TNSALT (உப்பு) உற்பத்தியை பெருக்குவதற்கும், அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை பெருக்குகின்ற வேலையையும் இந்த அரசு செய்து கொண்டிருக்கின்றது.

முதலமைச்சர் திராவிட நாயகன் அவர்களின் நல்லாட்சியில், தொழில்துறை வரலாறு காணாத பெரும் பாய்ச்சலோடு பீடுநடை போட்டு வருகிறது. இந்த வளர்ச்சிக்கு அடித்தளமிட்டது திராவிட மாடல் சித்தாந்தங்களும், சிந்தனைகளும்தான் என்று கூறினால் அது மிகையாகாது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதல்களை ஒட்டியே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

அறிவு சார் நகரம்!

திராவிட மாடல் சித்தாந்தங்களின் அடிநாதமே கல்வி. கல்வி இருப்பதால்தான் இன்று தொழில் துறையில் நமது தமிழ்நாடு திறன் தலைநகராக இன்று திகழ்கிறது. இந்த வளர்ச்சி தொடரவேண்டுமென்றால் அறிவுசார் பொருளாதாரத்தை நோக்கி இந்த பயணம் தொடரவேண்டும். ஆகையால்தான், சென்னைக்கு அருகாமையிலேயே TIDCO மூலமாக அறிவுசார் நகரத்தை அறிவித்திருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

'படிப்பது மட்டுமே உன் வேலை மற்றதை நான் பார்த்து கொள்கிறேன்' என்று ஒரு பாசமிகு தந்தையை போல் தமிழகத்தின் அடுத்த தலைமுறையினரை வளர்த்தெடுத்து வருகிறார் தமிழ்நாடு முதல்வர் அவர்கள். படி! படி! படி! என்று உரக்க சொல்கிறது திராவிட சித்தாந்தம். ஆனால், இடி! இடி! இடி! என்று சொல்கிறது இதற்கு எதிரான சித்தாந்தம். திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்களின் அரவணைப்பிலும், பாதுகாப்பிலும் தமிழினம் வெல்லும். தமிழ்நாடு நிச்சயம் மென்மேலும் உயரும் என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, முதலமைச்சர் அவர்களின் செயலாளர்களான N. முருகானந்தம், டாக்டர் P. உமாநாத், M.S. சண்முகம், திருமதி அனு ஜார்ஜ், செயலாளர்கள் மற்றும் தனிச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர் அருமை உதயசந்திரன், , எனதருமை தொழில் துறை செயலாளர் அருண்ராய் அவர்களுக்கும் மற்றும் தொழில் துறையைச் சார்ந்த துறைத் தலைமை உயர் அதிகாரிகளுக்கும், மாநில திட்டக் குழு துணைத் தலைவர் எனது ஆருயிர் அண்ணன் ஜெயரஞ்சன் அவர்களுக்கும், என் திட்டக் குழு நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைக் தெரிவித்து நிறைவு செய்கிறேன்.

இந்தியாவிலேயே அதிக அளவில் தொழிற்சாலைகள் இருக்கும் மாநிலம் தமிழ்நாடு!

அறிவிப்புகள்

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

1.தமிழ்நாடு, தானியங்கி மோட்டார் வாகனம் மற்றும் வாகன உதிரிபாகங்கள், ஜவுளி, கனரக இயந்திரங்கள், தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல், வன்பொருள் போன்ற துறைகளில் சிறந்த வளர்ச்சி பெற்று தொடர்ந்து தொழில்மயமான மாநிலமாக விளங்கி வருகிறது. தற்போது, வானூர்தி மற்றும் பாதுகாப்புத் துறையில் பெரும் முதலீடுகளை ஈர்த்து வருவதன் தொடர்ச்சியாக மேலும் இத்துறை சார்ந்த பன்னாட்டு நிறுவனங்களை ஈர்த்து அதிகளவிலான முதலீடுகளை பெறும் நோக்கில் "தமிழ்நாடு விண்வெளி தொழில் கொள்கை" (Space Tech Policy) வெளியிடப்படும். மாநிலத்தில் விண்வெளித் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு உதவும் வகையில் வழிமுறைகள் மற்றும் தொலைநோக்கு திட்டங்கள் இக்கொள்கையில் வகுக்கப்படும். Circular Economy Policy வெகு விரைவில் இங்கு கொண்டுவரப்படும்.

2) சுழற்பொருளாதார சூழலமைப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், அவைகளுக்கு கட்டமைக்கப்பட்ட ஊக்கச் சலுகைகள் அளித்து, அத்துறையில் முதலீடுகளை அதிக அளவில் ஈர்க்கும் வகையிலும், தரமான வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும், தமிழ்நாடு சுழற்பொருளாதாரக் கொள்கை வெளியிடப்படும். நிலையான நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்ப தீர்வுகளை ஏற்றுக் கொள்ளுதல் மற்றும் மறுசுழற்சி முறையில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் உற்பத்தியில் முதலீடுகள் ஆகியவற்றை இந்த கொள்கை ஊக்குவிக்கும்.

3. பொம்மைகள், பொழுதுபோக்கு மற்றும் குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி துறையில் பெருமளவில் வேலைவாய்ப்புகள் உருவாகிட வாய்ப்பு உள்ளது. இத்துறையில் அதிக அளவிலான முதலீடுகளை ஈர்த்திடவும், அதற்கு உகந்த சூழலமைப்பினை மேம்படுத்தவும், சிறப்பு சலுகைகள் கொண்ட ஒரு திட்டம் வெளியிடப்படும்.

Creative Economyஐ ஒட்டி ஒரு சிறப்பு Policy வெகுவிரைவில் வெளியிடப்படும்.

4. வடிவமைப்பு, கலை, கலாச்சாரம் மற்றும் கேளிக்கை தொடர்பான படைப்பாற்றல் மிக்க தொழில்களை அடையாளம் கண்டு, அத்துறைகள் சார்ந்த தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் திட்டங்கள் தீட்டுவதற்கான, ஒரு செயல் திட்ட வரைபடம் வெளியிடப்படும். இதன் மூலம், படைப்பு திறன் (creativity) மற்றும் திறன்மிகு வேலைவாய்ப்புகளுக்கான சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ள பொருளாதாரத் துறைகளில் பெருமளவில் முதலீடுகளை ஈர்த்திட இயலும்.

5. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள தொழில் நிறுவனங்களுக்கு பரவலாக ஆதரவு சேவைகள் வழங்குவதற்கும், இந்நிறுவனங்களுக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் பெற்றுத்தர முயற்சிகள் மேற்கொள்வதற்கும், மேலும் தொழிலகங்கள் மற்றும் வர்த்தக சங்கங்களுடன் இணைந்து கூடுதல் முதலீடுகளை ஈர்ப்பதற்கும், வழிகாட்டி நிறுவனத்தின் கிளை அலுவலகம் கோயம்புத்தூரில் தொடங்கப்படும்.

ஜப்பான் நாட்டு நிறுவனங்களுடன் முதலீடுகளை அங்கிருந்து ஈர்க்கும் வண்ணம் Japan Desk ஒன்று உருவாக்கப்படும்.

6. அதிகளவிலான உயர்தொழில்நுட்ப ஜப்பானிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்துள்ளன. இந்நிறுவனங்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குவதற்கும், ஜப்பானிய நிறுவனங்களின் முதலீடுகளை மேலும் பெருமளவில் தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதற்கும், டோக்கியோவில் ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு அமைவு (Japan Desk) வழிகாட்டி நிறுவனம் மூலம் உருவாக்கப்படும்.

அதோபோல, Tourism promotion என்று ஒரு சிறப்பு special cell உருவாக்கப்படும்.

7. சுற்றுலாத் துறையில், புதிய முதலீடுகளை ஈர்த்திடவும், இத்துறையில் முதலீடு மேற்கொள்ளும் முதலீட்டாளர்களுக்கு அனைத்து ஆதரவுச் சேவைகள் அளித்திடவும், திட்டங்களை செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதை தொடர்ச்சியாக கண்காணித்திடும் வகையிலும், வழிகாட்டி நிறுவனத்தில் ஒரு சிறப்பு அமைப்பு (Special Cell for Tourism Investment Promotion & Facilitation) ஏற்படுத்தப்படும். இத்துறையில் முதலீடுகளை ஈர்த்திடும் வகையிலும், மாநிலத்தில் புதிய மற்றும் ஏற்கனவே சிறந்து விளங்கிடும் சுற்றுலாத்தலங்களில் உள்ள அனைத்துவித வசதிகளை மேம்படுத்தும் குறிக்கோளுடனும் இந்த சிறப்பு அமைப்பு செயல்படும். தமிழ்நாட்டில் சுற்றுலாவை ஊக்குவிக்க SIPCOTமூலம் அங்கு நிலங்கள் எடுத்துத் தரப்படும்.

8. தமிழ்நாடு, தொழில் வளர்ச்சியில் முன்னோடி மாநிலமாகத் திகழ்வதில் சிப்காட்டின் பங்களிப்பு அளப்பரியது. தொழில் வளர்ச்சியுடன் சுற்றுலா வளர்ச்சியையும் மேம்படுத்தி, முதலீட்டை ஈர்க்கும் வண்ணம் சுற்றுலாதலங்களில் உகந்த இடங்களை சிப்காட் தேர்வு செய்து, தனியார் பங்களிப்புடன் சுற்றுலாதலங்களின் உள்கட்டமைப்புகளை ஏற்படுத்தும். இதனால், மாநிலத்தில் தொழில் வளர்ச்சியும், சுற்றுலா வளர்ச்சியும் ஒருங்கிணைந்து தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஒரு புதிய மைல்கல்லை நோக்கி பயணிக்கும்.

விண்வெளி தொழில் கொள்கை வெகு விரைவில் அறிவிக்கப்படும்!

9. திருவள்ளூர் மாவட்டத்தில், பெருகி வரும் தொழில் மனைத் தேவையைக் கருத்தில் கொண்டு, கும்மிடிப்பூண்டி வட்டத்தில் சுமார் 1,500 ஏக்கர் நிலப்பரப்பில், ஒரு புதிய சிப்காட் தொழிற்பூங்கா உருவாக்கப்படும். இதில் சாலை, மழை நீர் வடிகால், நீர் வழங்கல் மற்றும் விநியோக அமைப்பு, தெரு விளக்குகள், பசுமை சூழல் பேணுதல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் போன்ற அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்படும். இதன் மூலம், சுமார் 5,250 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்படுவதுடன், சுமார் 45,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்.

10. தூத்துக்குடி மாவட்டத்தில் பெருகி வரும் தொழில் மனைத் தேவையை கருத்தில் கொண்டு, ஒட்டப்பிடாரம் வட்டத்தில் சுமார் 1,000 ஏக்கர் நிலப்பரப்பில், ஒரு புதிய சிப்காட் தொழிற்பூங்கா உருவாக்கப்படும். இதில் சாலை, மழை நீர் வடிகால், நீர் வழங்கல் மற்றும் விநியோக அமைப்பு, தெரு விளக்குகள், பசுமை சூழல் பேணுதல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் போன்ற அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 1,500 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்படுவதுடன், சுமார் 25,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்.

11. மாநிலம் முழுவதும் சமச்சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதோடு, வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்கத்தில் தற்போது சிப்காட் தொழிற்பூங்கா ஏதுமில்லாத அரியலூர் மாவட்டத்தில், முதற்கட்டமாக, உடையார் பாளையம் வட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள சுமார் 175 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு சிப்காட் தொழிற்பூங்கா உருவாக்கப்படும். இதில் சாலை, மழை நீர் வடிகால், நீர் வழங்கல் மற்றும் விநியோக அமைப்பு, தெரு விளக்குகள், பசுமை சூழல் பேணுதல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் போன்ற அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 262.5 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்படுவதுடன், சுமார் 3,500 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்.

12. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெருகி வரும் தொழில் மனைத் தேவையை கருத்தில் கொண்டு, திருவெறும்பூர் வட்டத்தில் சுமார் 150 ஏக்கர் நிலப்பரப்பில், மேலும் ஒரு சிப்காட் தொழிற்பூங்கா உருவாக்கப்படும். இதில் சாலை, மழை நீர் வடிகால், நீர் வழங்கல் மற்றும் விநியோக அமைப்பு, தெரு விளக்குகள், பசுமை சூழல் பேணுதல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் போன்ற அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 225 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்படுவதுடன், சுமார் 3,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்.

13. திருவாரூர் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், மன்னார்குடி வட்டத்திலும், கூத்தாநல்லூர் வட்டத்திலும் சுமார் 150 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் தொழிற்பூங்காக்கள் உருவாக்கப்படும். இதில் சாலை, மழை நீர் வடிகால், நீர் வழங்கல் மற்றும் விநியோக அமைப்பு, தெரு விளக்குகள், பசுமைசூழல்பேணுதல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் போன்ற அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 225 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்படுவதுடன், சுமார் 3,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்.

14. காஞ்சிபுரம் மாவட்டத்தில், குறிப்பாக திருப்பெரும்புதூர் மண்டலம் பெரிய தொழில் மையமாக உருப்பெற்றுள்ளதைக் கருத்தில் கொண்டு, திருப்பெரும்புதூர் வட்டத்தில், சுமார் 750 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழிற்பூங்கா உருவாக்கப்படும். இதில் சாலை, மழை நீர் வடிகால், நீர் வழங்கல் மற்றும் விநியோக அமைப்பு, தெரு விளக்குகள், பசுமை சூழல் பேணுதல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் போன்ற அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 2,625 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்படுவதுடன், சுமார் 22,500 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்.

15. மிகப்பெரிய சாலை போக்குவரத்து மார்க்கமாக உருப்பெற்றுள்ள சென்னை வெளி வட்டச் சாலையின் பயன்களை தொழில் நிறுவனங்களுக்கு பெற்றுத்தரும் நோக்கில், இச்சாலையின் கிழக்கு பக்கத்தில் 50 மீட்டர் அகல தொழில் பயன்பாட்டிற்கு ஏற்ற நிலங்களும் அதையொட்டிய கூடுதல் நிலங்களும் கண்டறியப்பட்டுள்ளன. அதன்படி, சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்பூங்கா உருவாக்கப்படும். இதன் மூலம் சுமார் 1,000 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்படுவதுடன், சுமார் 6,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்.

16. பெரம்பலூர் மாவட்டத்தில் வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில், குன்னம் வட்டத்தில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் தொழிற்பூங்கா உருவாக்கப்படும். இதில் சாலை, மழை நீர் வடிகால், நீர் வழங்கல் மற்றும் விநியோக அமைப்பு, தெரு விளக்குகள், பசுமை சூழல் பேணுதல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் போன்ற அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இதன் மூலம் சுமார் 150 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்படுவதுடன், சுமார் 2,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாகும்.

இதற்கு நாங்கள் ஏற்கெனவே commitment கொடுத்து, நிறுவனங்கள் வருவதற்கு ஏற்கெனவே தயாராக இருக்கின்றன. எனவே, கரூர் மாவட்டத்தில், வெகு விரைவில் TIDEL NEO mini TIDEL park நிச்சயமாக உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

17. கரூர் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்படுத்துவதற்கும், இப்பகுதியினை சுற்றியுள்ள படித்த இளைஞர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறையில் வேலைவாய்ப்பை வழங்குவதற்கும் மினி டைடல் பூங்கா அமைக்கப்படும். இப்பூங்காவானது, தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், வணிக செயலாக்க நிறுவனங்கள் (BPOs), இணை வேலை செய்யும் இடங்கள், புத்தொழில் நிறுவனங்கள் (Startups) போன்ற நிறுவனங்களை ஈர்ப்பதோடு, சுமார் 500 தகவல் தொழில்நுட்ப நிபுணர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கி பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும்.

திருவண்ணாமலை மாவட்டத்திலேயும் என்னுடைய ஆருயிர் அண்ணன் அவர்கள் கேட்டதற்கிணங்க வெகுவிரைவில் ஒரு mini TIDEL பூங்கா அமைக்கப்படும். அதேபோல் நம்முடைய உறுப்பினர் மு.பெ. கிரி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அங்கு SIPCOT அமைப்பதற்கான வேலையும் வெகுவிரைவில் துவங்கப்படும். அதற்காக கவலைப்பட வேண்டாம்.

18.திருவண்ணாமலை மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி ஏற்படுத்துவதற்கும், இப்பகுதியினை சுற்றியுள்ள படித்த இளைஞர் களுக்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறையில் வேலைவாய்ப்பை வழங்குவதற்கும் மினி டைடல் பூங்கா அமைக்கப்படும். இப்பூங்காவானது, தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், வணிக செயலாக்க நிறுவனங்கள் (BPOs), இணை வேலை செய்யும் இடங்கள், புத்தொழில் நிறுவனங்கள் (Startups) போன்ற நிறுவனங்களை ஈர்ப்பதோடு, சுமார் 500 தகவல் தொழில்நுட்ப நிபுணர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்கி பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும்.

19.தொழிற்பூங்காக்களை உருவாக்குவதில் தனியார் முதலீடுகளை ஈர்க்கும்வண்ணம், தொழிற்பூங்காக்களை உருவாக்குவதில் சிப்காட் மற்றும் தனியார் நிறுவனங்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, தனியார் நிறுவனங்களுடன் கூட்டு முயற்சியில் (joint venture) தொழிற்பூங்காக்களை சிப்காட் உருவாக்கும்.

மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு இந்த ஆண்டு TIIC மூலமாக ரூ.2,100 கோடி வழங்கப்படும்.

20. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், புதிய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை நிறுவுவதற்கும், ஏற்கனவே உள்ள தொழில் நிறுவனங்களை விரிவாக்கம் செய்வதற்கும், நவீனமயமாக்குவதற்கும், அவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் இந்த ஆண்டு 2,100 கோடி ரூபாய் காலக் கடன் வசதியும், பட்டி நிதி உதவியும் (Bill Financing) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் வழங்கப்படும். இதன்மூலம் 1,150க்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பயனடையும். மேலும் 8,500க்கும் மேற்பட்ட புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

சிப்காட் தொழிற்பூங்காவில் Product Display Centre ஒன்று துவங்கப்படும்.

21. காஞ்சிபுரம் மாவட்டத்தில், இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர், பிள்ளை ப்பாக்கம், ஒரகடம் மற்றும் வல்லம் வடகால் சிப்காட் தொழிற்பூங்காக்கள் அமையப்பெற்றுள்ளன. இப்பூங்காக்களில் அமையப்பெற்றுள்ள தொழிற்சாலைகளின் தயாரிப்புப் பொருட்களை ஒருசேர காட்சிப்படுத்த ஏதுவாக, இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் தனித்துவம் வாய்ந்த ஒரு தயாரிப்பு பொருட்கள் காட்சி மையம் 5 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும். இதன் மூலம், உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களுக்கும், அதன் பயனாளிகளுக்கும் இடையிலான தொடர்பு மேம்படுத்தப்பட்டு, வணிக வளர்ச்சி ஊக்கப்படுத்தப்படும்.

தூத்துக்குடி, கும்மிடிப்பூண்டி மற்றும் மாம்பாக்கம் சிப்காட் தொழிற்பூங்காக்களில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விளையாட்டுத் திடல்கள் அமைக்கப்படும்.

22. சிப்காட் தொழிற்பூங்காக்களை தொழிலாளர்களுக்கு உகந்த பணியிடங்களாக மேம்படுத்திடும் நோக்கில், தூத்துக்குடி, கும்மிடிப்பூண்டி மற்றும் மாம்பாக்கம் சிப்காட் தொழிற்பூங்காக்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பயன்பாட்டிற்காக, அத்தொழிற்பூங்காக்களில் விளையாட்டுத் திடல்கள் மொத்தம் 6 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும். இது அத்தொழிலாளர்களை உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் வலிமைப்படுத்தி, உற்பத்தித் திறனை அதிகரிக்க ஏதுவாக அமையும்.

ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் சுமார் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் MSand உற்பத்திக்காக ஒரு புதிய ஆலை அமைக்கப்படும்.

23. ஆலங்குளம் சுண்ணாம்புக்கல் சுரங்கங்களில் உள்ள சுமார் 2.4 கோடி மெட்ரிக் டன் சுரங்கக் கழிவுகள் கொண்டு ஒரு மணி நேரத்திற்கு 500 மெட்ரிக் டன் திறன் கொண்ட MSand உற்பத்தி ஆலை சுமார் 25 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படும். இதன்மூலம் கட்டுமான தொழிலுக்கு தேவைப்படும் MSandனை உற்பத்தி செய்ய இயலும்.

பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்க ளுக்கு எனது பதிலுரையில் போதுமான விளக்கங்களை அளித்திருக்கிறேன். மீதமுள்ள வெட்டுத் தீர்மானங்கள், வருகின்ற காலங்களில் முதலமைச்சர் அவர்களுடன் கலந்துரையாடி பரிசீலிக்கப்படும். எனவே, உறுப்பினர்கள் தாங்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள 20242025 ஆம் ஆண்டிற்கான எனது 23 அறிவிப்புகளையும் ஏற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பதிலுரை வழங்கினார்.

திருவாரூர் மாவட்ட மருத்துவ அணி சார்பில் மாபெரும் மருத்துவ முகாம்!

பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. - டாக்டர்.அஞ்சுகம் பூபதி பங்கேற்பு!

திருவாரூர்,ஜூலை 2.

திருவாரூர் மாவட்ட மருத்துவ அணியின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மாபெரும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் அஞ்சுகம் பூபதி பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு முதல்வர் தளபதி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின் படியும், திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் ஆலோசனைகளின்படியும் திருவாரூரில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவும், 101 வது பிறந்தநாள் விழாவும் எழுச்சியோடு கொண்டாடப்பட்டு வருகிறது.

மாநில மருத்துவ அணி தலைவர் டாக்டர்.திருமதி. கனிமொழி சோமு எம்.பி., மாநில மருத்துவ அணி செயலாளர் டாக்டர்.எழிலன்நாகநாதன் எம்.எல்.ஏ.ஆகியோரின் வழிகாட்டுதல்படி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு திருவாரூர் மாவட்ட மருத்துவ அணியின் சார்பில் திருவாரூர் நகரம் நியூ பாரத் மேல்நிலைப்பள்ளியில் பொது மருத்துவம், பல் மருத்துவம் மற்றும்அகர்வால் கண் மருத்துவமனையினரால் கண் பரிசோதனை முகாம்கள் நடைபெற்றன.

மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் தஞ்சை மாநகராட்சி துணை மேயரும், மாநில மருத்துவர் அணி துணை செயலாளருமான டாக்டர்.அஞ்சுகம் பூபதி பங்கேற்றுஇலவச சிகிச்சை முகாமை தொடங்கி வைத்தார். மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர்டாக்டர்.திவாகரன் வரவேற்புரையாற்றினார்.

மாவட்ட மருத்துவ அணி தலைவர் டாக்டர் வி.ஜே..சரவணன், நகர செயலாளர் வாரை.எஸ். பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், நகர்மன்ற துணைதலைவர் அகிலா சந்திரசேகர் திட்டக்குழு உறுப்பினர் இரா. சங்கர், ஆகியோர் முன்னிலை ஏற்றனர்.

முன்னாள் மாணவரணி மாவட்ட அமைப்பாளர் அமுதா சேகர் துணை தலைவர்கள் என்.பாலசுந்தரம், டாக்டர்.எஸ்.வெங்கட்ராமன், டாக்டர்.ஆர். எஸ்.மலர்கொடி, துணை அமைப்பாளர்கள் டாக்டர்.ஷர்மிளா பானு, என். பி.சரவணன், எம்.தீபன், கே.பி.ரமேஷ் குமார் ஆகியோர் பங்கேற்று முகாமை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தினர்.

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருவாரூர் மாவட்ட மருத்துவ அணி நடத்திய இந்த மருத்துவ சிகிச்சை முகாமில் திருவாரூர் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் பங்கேற்று சிகிச்சை பெற்றனர். அனைத்து பரிசோதனைகளும், மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டது.

விக்கிரவாண்டி தொகுதியில், கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து பிரச்சாரம் செய்வது குறித்து திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ. மாவட்ட நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில்

பீஞ்சமந்தை மலைக் கிராமத்திற்கு மினி பேருந்து இயக்கப்படுமா?

சட்டப் பேரவையில் ஏ.பி.நந்தகுமார் கேள்வி!

சென்னை, ஜூலை 2-

அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட பீஞ்சமந்தை மலை கிராமத்தில் உள்ள மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில் அந்த மலைக் கிராமத்திற்கு மினிப் பேருந்து வசதியை ஏற்படுத்தித் தருமாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அளித்த பதிலும் வருமாறு:-

ஏ.பி. நந்தகுமார்: *பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அணைக்கட்டுப் தொகுதிக்குட்பட்ட பீஞ்சமந்தை மலை கிராமம், சாலையே இல்லாத அந்த கிராமத்திற்கு தலைவர் தளபதி அவர்களினுடைய ஆட்சியிலே சாலை அமைத்துத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 100 ஆண்டு காலங்கள் இல்லாத அந்த மலை கிராமம், சாலை அமைத்துத் தந்ததன் வாயிலாக நன்றியுள்ள மக்களான பீஞ்சமந்தை மலைவாழ் மக்கள், இந்த நாடாளுமன்றத் தேர்தலிலே 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட வாக்குகளை அளித்து தங்களுடைய நன்றிக் கடனை செலுத்தி இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அந்த மலைக் கிராமத்திற்கு மினி பேருந்து வசதியைச் செய்து தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்: *உறுப்பினர் நந்தகுமார் குறிப்பிடுகின்ற பீஞ்சமந்தைப் பகுதிக்கு கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது, தேர்தல் பொறுப்பாளராக இருந்து நான் பணியாற்றியதினால், அந்தப் பகுதி மக்களுடைய சிரமம் தெரியும், அப்பொழுதெல்லாம் அவர்கள் இரு சக்கர வாகனத்தில்தான் சென்று வந்தார்கள். திராவிட மாடல் முதல்வர் அவர்களுடைய தலைமையிலான ஆட்சி ஏற்பட்டபிறகுதான் அங்கு சாலை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சாலைப் பணிகள் முடிவுற்று திறக்கின்ற போதே உறுப்பினர் ஏ.பி. நந்தகுமார் இங்கு பேருந்துகள் இயக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தார்கள். அங்கு இயக்குவது cut chase busதான் இயக்க முடியும். அதற்கான பேருந்துகள் வாங்கப்படும்பொழுது, முன்னுரிமை கொடுத்து இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்ரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள முட்டத்தூர் கிராமத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்குச் சேகரித்தார்.உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.